மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1961-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாங்க ஆணையின் கீழ் இந்த முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது கோளாறு இருந்தால் அதை எழுதி அனுப்பினால் அந்தச் சங்கடங்களை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறித் துணித் தேக்கமும், நெசவாளர் நெருக்கடி நிலையும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு வேண்டி ஒரு முன்னறிக்கையை கொடுத்திருக்கிறேன்.—

"திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் அதிகம் தேங்கியிருப்பதாலும் பல நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பாங்கு கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும் கைத்தறிகள் செயல்படாமல், நெசவாளர்கள் வேலை இல்லாமல் இருப்பது பற்றி விவாதிக்க"

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருப்பது அரசாங்கத்தினுடைய அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியங்களில் ஒன்றாகும். அந்தக் கருத்தை இப்போது பேரவையின் முன் நடைபெறுகிற பொது விவாதத்தில் எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

இந்தக் கருத்தையே சட்டப்பேரவை 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர வாய்ப்பு இருந்திருக்கும். இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரால் கொடுத்து விடுகிறார்கள். இதன் காரணமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின் உயிர் நாடியையே இந்தப் போக்கு மாற்றிவிடுவதாகத் தெரிகிறது. ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை அறிந்து அதைக் கொடுக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மேட்டுப்பாளையம்—உதகை இருப்புப் பாதை அகற்றப்படுவதைத் தடுத்தல்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் நீலமலைத் தொடரில் இயற்கை எழிலுடன் விளங்கும் உதகை செல்லும் மேட்டுப்பாளையம்—உதகை புகைவண்டிப் பாதையை பொருளாதார காரணங் காட்டி எடுத்துவிட இந்தியப் பேரரசு முயற்சிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1968 மார்ச் 1]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயன்தரக்கூடியவையாக இல்லாததால், தமிழகத்திலுள்ள கீழ்வரும் 4 இருப்புப் பாதைகளை மூடிவிடுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.—

1. மேட்டுப்பாளையம்—உதகை இருப்புப்பாதை.
2. மாயூரம்—தரங்கம்பாடி இருப்புப்பாதை.
3. பேரளம்—காரைக்கால இருப்புப்பாதை.
4. நீடாமங்கலம்—மன்னார்குடி இருப்புப்பாதை.

மேற்கண்ட முடிவால் விளையும் கஷ்டங்களை நிவர்த்திக்கவும், கூடுதலான சாலைப் போக்குவரத்து வசதிகளைச் செய்யவும் தமிழக அரசு ஆவன செய்ய உறுதியும், மேற்கண்ட முடிவின் மீதான இந்த அரசின் கருத்தினையும் மத்திய அரசு தெரிவிக்க வேண்டிக் கேட்டுள்ளது. கூடுதலான சாலைப் போக்குவரத்து வசதிகளைச் செய்ய நிதி உதவியளிக்கக் கருதியுள்ளதாகவும் அவ்வரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த விஷயம் முழுவதும் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த அரசின் முடிவு விரைவில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும். இதற்கிடையில் மேட்டுப்பாளையம்—உதகை பாதை நிறுத்தப்படக்கூடாதென மத்திய அரசுக்கு வற்புறுத்தப்பட்டுள்ளது. அதற்கான காரணங்கள் பின்வருமாறு :—

(1) உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய வசதி கொண்ட இதனை பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு கவனிக்கக்கூடாது. இந்த வசதி தவிர்க்கப்பட்டால் நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்படும்.

(2) இப்பகுதியிலுள்ள தேயிலை காப்பித் தோட்டங்களுக்கும், அரசாங்கத் திட்டங்களுக்கும் பொதுத்துறை தொழில்களுக்கும் முக்கிய தேவைகளை நிறைவு செய்ய இந்தப் பாதை மிக அவசியம்.

(3) மாணவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் வசதியான போக்குவரத்து அளிக்கிறது. இது இல்லையேல் நெருக்கடி நேரங்களில் பேருந்துகளில் கூட இடம் கிடைக்காமல் கஷ்டப்படுவார்கள்.

பொது மக்களுக்குத் தேவையான அளவில், ஏனைய பாதைகளிலும் போக்குவரத்து வசதிகள் கிடைப்பதில்லை. சாலைப் போக்குவரத்து மட்டுமே பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட முடியாது. மேலும் கூடுதலான சாலைப் போக்குவரத்துக்கு நல்ல சாலைகளும் போட நேரிடுகிறது. வரம்புக்குட்பட்ட மலைப்பகுதியாக இருப்பதினால் மேட்டுப்பாளையம்—உதகை பகுதியில் கூடுதலான சாலை வசதி செய்ய இயலாது. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் சாலைகள் வயல்களினூடேயும் தாழ்ந்த நிலப்பகுதியிலும் செல்கின்றன. மாவட்டத்தில் செல்லும் சில பாதைகள் நெல்லும் அரிசியும் கொண்டு போக அவசியமாகத் தேவைப்படுகின்றன. மேற்கூறிய காரணங்களாலும், பொது மக்களின் உணர்ச்சியையும் மனதில் கொண்டும் மத்திய அரசிடம் இது விஷயமாக மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென எழுதத் தீர்மானித்துள்ளது. மத்திய அரசு தன்னுடைய யோசனையைக் கைவிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில மூன்று வழித்தட இருப்புப்பாதை கொண்ட இடமே மேட்டுப்பாளையம்—உதகை ரயில்பாதையாகும். பண்டித நேரு அவர்களே அதைப் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். பொருளாதார காரணத்தை வைத்து இந்தப் பாதையைக் கைவிடுவதானால் இதுபோல பல திட்டங்களை நீக்கவேண்டி வரும். ஆகையால் மக்கள் நலன் ஒன்றையே பேணி போக்குவரத்து இயங்க வேண்டிய காரணத்தால் மக்கள் நலனே முக்கியம் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி, அதுவும் சிறப்பாக அமைந்

துள்ள இந்த மூன்று வழித்தட இருப்புப்பாதையான மேட்டுப்பாளையம்—உதகை ரயில்பாதையைக் கைவிடக்கூடாது என்பதை மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எனது அறிக்கையிலேயே விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இதுபற்றி மத்திய அரசாங்கத்துடன் தமிழக அரசு இன்றைய தினம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

4 1966–68-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணுண்டோ :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 1968–69-ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை வரவேற்று பாராட்டுவதற்குரிய ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்காக முதற்கண் தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய தினம் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள்—இந்த அறிக்கையை கருப்புக் கண்ணுடி கொண்டு பார்வையிட்டு—துருவித் துருவி அதில் என்ன என்ன குற்றங்குறைகளைக் கண்டிபிடிக்க முடியும் என்று பார்த்து எடுத்துக் கூறியிருக்கிறுர்கள். ஆனுல் உண்மையில் எதிர்க்கட்சி என்ற சம்பிரதாயத்தோடு பேசி இருக்கிறுர்களே தவிர தங்களுக்குண்டான கடமையையும், நாட்டு மக்களுக்கு தாங்கள் செய்யவேண்டிய கடமையும் உணர்ந்து இதில் உள்ள பாராட்டத்தக்க நல்ல அம்சங்களைப் பாராட்டினுர்களா என்ருல் இல்லை. குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினர்கள் பாராட்டத் தவறியிருக்கிறுர்கள். அதே நேரத்தில் எதிர்க்கட்சியில் இருக்கிற சுதந்திராக் கட்சி உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் நிதி நிலை அறிக்கையில் உள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டி இருக்கிறுர்கள். தங்களுக்குண்டான பொறுப் புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும் செயலாற்றியிருக்கிறுர்கள். எங்களைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையில் பல நல்ல அம்சங்கள் காணக்கிடக்கிறது. குறிப்பாக புது வரிகள் இல்லை. ஏற்கெனவே இருக்கிற வரிகள் கூட்டப்படவில்லை. இவை எல்லாவற்றையும்விட இந்த நிதிநிலை அறிக்கை ஒரு உபரி நிதிநிலை அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதைக் பார்க்கிறோம்.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை)

முற்பகல். 10·00 விவசாயத்திற்கு வேண்டிய நிதியை சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிக அளவிலே உயர்த்தியிருக்கிறுர்கள். அதேபோல கல்விக்கும் சென்ற ஆண்டைவிட அதிகமான அளவில் உயர்த்தியிருக்கிறுர்கள். நாட்டினுடைய நிலைமையை நன்குணர்ந்து நாட்டிலே இருக்கின்ற உணவுப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே விவசாய பெருக்கத்திற்கும், அறிவுப் பசியைப் போக்கும் வகையிலே கல்விக்காகவும் அதிக கவனம் செலுத்தப் பட்டு அறிஞர் அண்ணு அவர்களால் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கிறது. இதை எல்லாதரப்பு மக்களும் பாராட்டுகிறுர்கள். நேற்றைய தினம் இந்த நிதிநிலை அறிக்கையைக் குறைகூறி பேசிய காங்கிரஸ் நண்பருடைய நிலைமை இன்றைய தினத்திலிருந்து எப்படி இருக்குமோ என்பதை அறிய நாங்கள் வேதனைப்படுகின்றோம். நேற்றைய தினம் இந்திய உபகண்டத்தின் நாடாளு மன்றத்தில் நிதியமைச்சர் பெருமதிப்பிற்குரி திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் தன்னுடைய பிறந்த நாள் பரிசாக நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறுர்கள். அந்த அறிக்கையைப் பார்த்தால் புதிய வரிகள் இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த வரிகள் கூட்டப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்ருல், நேற்றைய தினம் 6 பைசாவாக இருந்த கார்டுகள் 10 பைசாவாகக் கூட்டப்பட்டிருக்கிறது. 10 பைசாவாக இருந்த உள்நாட்டுத் தபால்கள் 15 பைசாவாகக் கூட்டப்பட்டிருக்கின்றன. ஏப்ரல் மாதத்திலிருந்து . . . .